**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**
**CC No.39/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 3 |
| Name | : கம்சலா |
| Father/Husband's Name | : சங்கர் |
| Village | : பாலூர் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.11.2025.

Accused A1, A3, A4, A5 are present. A2 absent online petition allowed.

**முதல் விசாரணை–**

நான் கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சண்டை நடந்தது. நான் வந்து பார்த்தேன். என்ன சண்டை என்று எனக்கு தெரியாது. யார் யாருக்கும் சண்டை என்று தெரியாது. ஆஜர் எதிரிகள் எனது வீட்டிற்கு பக்கத்து தெருவில் இருக்கிறார்கள். சண்டையில் யாருக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக யார் புகார் அளித்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்த சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை –**

நான் போலிஸ் விசாரணையில் 25.05.2016 அன்று காலை 10.00 மணியளவில் எனது மருமகன் மற்றும் மகள் முருகன் கோயில் தெருவில் கழிவு நீர் வழியை எடுக்கும்போது ஆஜர் எதிரிகள் என் மருமகனையும் என் மகளையும் அசிங்கமாக திட்டியதாக போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. போலிஸ் விசாரணையில் கருணாகரன் என்பவரை இரும்பு பைப்பால் அடித்தார் என்று கூறியுள்ளேனா என்றால் நான் போலிசை பார்க்கவில்லை. அதை தடுக்க வந்த என்னை அசிங்கமாக திட்டினார்களா என்றால் இல்லை. எதிரிகள் 5 பேரும் சேர்ந்து அடித்தார்கள் என்று போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சம்பவத்தை ஊர்காரர்கள் பார்த்ததால் அவர்கள் ஓடிவிட்டார்கள் என்றால் சரியல்ல நான் அவர்களை பார்க்கவேயில்லை. காயம் பட்ட எனது மருமகளை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரிகள் உங்கள் ஊர்காரர்கள் என்பதால் நடந்த சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை–** இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

(SD/- V.LAVANYA
Judicial Magistrate No.I,
Chengalpattu.